## வினா எண் :: 6.1.4.3.D

**இரு எண்களை ஒப்பிடுதல் - பயிற்சி**

வளர்மதி மற்றும் அவளுடைய 6 தோழியரின் உயரம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

வளர்மதி - 155 செ.மீ, கயல்விழி - 160 செ.மீ, முத்தழகி - 158 செ.மீ, கவிதா - 164 செ.மீ, செந்திரு - 167 செ.மீ, சுமதி - 156 செ.மீ மற்றும் செந்தாமரை - 161 செ.மீ

## வினா

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

(A) அவர்களை உயர வரிசையில் நிற்கச்செய்தால் நடுவில் வரக்கூடியது யார்?

(B) அவர்களில் அதிக உயரமானவர் யார்?

(C) அவர்களில் மிகவும் உயரம் குறைந்தவர் யார்?

## விடை

வினா எண் (A)-யின் விடைகாணும் படிகள்

முதலில் அவர்களின் பெயர்களை அவர்களின் உயரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசைப்படுத்துதல்

| வரிசை எண் | தோழியரின் பெயர் | உயரம் (செ.மீ) |
|---|---|---|
| 1 | வளர்மதி | 155 |
| 2 | கயல்விழி | 160 |
| 3 | முத்தழகி | 158 |
| 4 | கவிதா | 164 |
| 5 | செந்திரு | 167 |
| 6 | சுமதி | 156 |
| 7 | செந்தாமரை | 161 |

| இறங்கு வரிசை எண் | தோழியரின் பெயர் | உயரம் (செ.மீ) |
|---|---|---|
| 1 | செந்திரு | 167 |
| 2 | கவிதா | 164 |
| 3 | செந்தாமரை | 161 |
| 4 | கயல்விழி | 160 |
| 5 | முத்தழகி | 158 |
| 6 | சுமதி | 156 |
| 7 | வளர்மதி | 155 |

## விடை

வினா எண் (A)-யின் விடை

அவர்களை உயர வரிசையில் நிற்கச்செய்தால் நடுவில் வரக்கூடியது **160 செ.மீ** உயரம் உடைய **கயல்விழி** ஆவார்.

## விடை

வினா எண் (B)-யின் விடை

அவர்களில் அதிக உயரமானவர் **167 செ.மீ** உயரம் உடைய **செந்திரு** ஆவார்.

## விடை

வினா எண் (C)-யின் விடை

அவர்களில் மிகவும் உயரம் குறைந்தவர் **155 செ.மீ** உயரம் உடைய **வளர்மதி** ஆவார்.

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 06:06 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.